

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2054 | மார்ச் 30, 2023 | புரட்சி 22 | முழக்கம் 11 | விலை: ரூ.3.00


# மாநில மாநாடு: களப்பணியில் பம்பரமாய் சுழலும் தோழர்கள்

**உதயநிதியுடன் சந்திப்பு :** அமைச்சர் உதயநிதி ஸ்டாலினை கழகத் தலைவர் கடந்த மார்ச் 26 மாலை சென்னை அன்பகத்தில் சந்தித்து, மாநாட்டில் பங்கேற்க அழைப்பு விடுத்தார். கட்டாயம் வருவேன் என்று அமைச்சர் உறுதியளித்தார். தலைமைக் கழகச் செயலாளர் தபசி. குமரன், தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகர் உடன் சென்றிருந்தனர்.



- மாநாட்டுக்கான இரண்டு நாள் நிகழ்ச்சிகள் உறுதி செய்யப்பட்டுவிட்டன. கழகத் தலைவர், பொதுச் செயலாளர், தலைமைக் கழகச் செயலாளர், சென்னை மாவட்டச் செயலாளர் உள்ளிட்ட தோழர்கள் கடந்த மூன்று நாள்களாக அமர்ந்து கலந்து பேசி நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டது. பேச்சாளர்களிடம் ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது.

- மாநாட்டுத் தீர்மானங்கள் – மாநாட்டில் எடுக்கும் உறுதி மொழிகளை கழகத் தலைவர், பொதுச் செயலாளர் கலந்து பேசி இறுதி வடிவம் கொடுத்து வருகின்றனர்.

- ராசிபுரம் புதிய பேருந்து நிலையம் அருகே தோழர்கள் சுவரெழுத்து எழுதிக் கொண்டிருந்த போது முன்னாள் நகர கூட்டுறவு வங்கி இயக்குநரும், அ.இ.அ.தி.மு.க. பிரமுகருமான வி. சுந்தரம் தோழர்களைப் பாராட்டி நன்கொடை வழங்கினார்.

- கழக மாநாட்டில் இடம் பெறும் இயக்கக் குழந்தைகளுக்கான கலை நிகழ்ச்சிகளில் 10 முதல் 15 வயதுக்குட்பட்டவர்கள் பங்கு பெறலாம். தனிநபர் கலை நிகழ்ச்சி எனில் 3 நிமிடம்; குழுவாக நிகழ்த்தினால் 5 முதல் 7 நிமிடம் எடுத்துக் கொள்ளலாம். கலந்து கொள்ள விரும்பும் குழந்தைகளின் பெயர்களை மார்ச் 15க்குள் கீழ்க்கண்ட எண்களுக்குப் பதிவு செய்ய வேண்டும்.

  சிவகாமி : 9824 48175

  சிவக்குமார் : 9688 856151

**சேலம் :** 23.3.23 அன்று சேலம் மேற்கு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் புதுசாம்பள்ளி முதல் மேட்டூர் ஆர்.எஸ். வரை இந்திராணி, சுதா தலைமையில் காலை 12 மணிக்கு மாநாட்டு வசூல் தொடங்கி இரவு 8 மணிவரை நடைபெற்றது. அந்தப் பகுதிகளிலுள்ள மளிகை கடை, ஒர்க் ஷாப், தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் பெருமளவில் மாநாட்டிற்கு நிதி வழங்கி ஆதரவு தெரிவித்தனர். வசூல் தொகை ரூ. 27,740 வசூலானது.

மாநாட்டு வசூல் பணியில் தங்களை இணைத்துக் கொண்ட தோழர்கள் நங்கவள்ளி பகுதி குமார், இந்திராணி, அருள்குமார், ராஜேந்திரன், அன்பு, மேட்டூர் ஆர்.எஸ். பகுதி சக்திவேல், முரளி, ராமச்சந்திரன், நாகராஜ், விவேக், ஜெகதீஷ், மேட்டூர் பகுதி முத்துராஜ், அம்ஜத்கான், கொளத்தூர் சுதா, ராமமூர்த்தி, மாரி, செட்டி உள்ளிட்டோர்.

21.3.23 அன்று சேலம் மேற்கு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் “இது தமிழ்நாடு இளம் தலைமுறையின் எச்சரிக்கை மாநாட்டு” வசூல் காலை 12 மணிக்கு தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர். சக்திவேல் தலைமையில் குஞ்சாண்டியூர் முதல் ராமன் நகர் வரை கடை வசூல் செய்யப்பட்டது. அந்தப் பகுதிகளில் இருக்கக்கூடிய பெரும் வணிகர் முதல் சிறு வியாபாரிகள் வரை பெட்டிக்கடை முதல் காய்கறி கடை வரை அதேபோல் அரசு அதிகாரிகள் முதல் மருத்துவர்கள் என அனைத்துப் பொது மக்களும் பெரும் உற்சாகத்தோடு மாநாட்டு நிதியை வழங்கி ஆதரவு கரம் நீட்டினர். மாநாட்டு வசூல் தொகை ரூ. 35,680/–.

**சுவரெழுத்துகள் தீவிரம் :** கடந்த 3 நாள்களாக மார்ச் 24, 25, 26 அஸ்தம்பட்டி, டால்மியா போர்டு, கொண்டலாம்பட்டி, ஜவஹர் மில் குரங்குச்சாவடி ஆகிய இடங்களில் சேலம் மாவட்டக் கழகத் தோழர்கள் சுவரெழுத்துப் பணிகளை மேற்கொண்டனர்.

இராசிபுரம், மயிலாடுதுறை, சூலூர், பல்லடம் ஆகிய பகுதி களிலும் கழகத் தோழர்கள் சுவரெழுத்துப் பணிகளைச் செய்து முடித்துள்ளனர்.

**கோவை :** கோவை மாநகர் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் 25.3.2023 சனிக்கிழமை மாலை 5 மணி அளவில் இரயில் நிலையம் அருகே வழக்கறிஞர் கார்கி அலுவலகத்தில் மாவட்டத் தலைவர் பா.இராமச்சந்திரன் தலைமையில் மாநாட்டை வெற்றிகரமாக நடத்துவது சம்பந்தமாக கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது.

கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட முடிவுகள்:

கோவையில் இருந்து தனியாக பேருந்து மூலம் செல்வது; கோவையைச் சுற்றி கிராமங்களுக்குச் செல்லும் நகரப் பேருந்துகளில் மாநகர் பகுதிகளில் துண்டறிக்கை வழங்கி மாநாட்டின் அவசியத்தை விளக்கி பிரச்சாரம் செய்வது; ஒவ்வொரு பணிக்கும் பொறுப்பாளர் அமைத்து செயல்படுவது; பெறப்படும் நன்கொடைகளை தலைமையிடம் ஒப்படைப்பது என முடிவெடுக்கப்பட்டது.

கலந்துரையாடலில் மேட்டுப்பாளையம் இராமச்சந்திரன், சூலூர் பன்னீர்செல்வம், நிர்மல் குமார், வெங்கட், கிருஷ்ணன் மாதவன், சிவராசு, புரட்சித்தமிழன், இயல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தோழர்கள் கிருஷ்ணன் – இராஜாமணியின் இணையேற்பு நாளையொட்டி தோழர்கள் மகிழ்வைப் பகிர்ந்து கொண்டனர்.

கலந்துரையாடல் கூட்டம் நடத்துவதற்கு தன் அலுவலகத்தைக் கொடுத்து உதவிய வழக்கறிஞர் கார்கிக்கு நன்றி.

**தகவல் : நிர்மல் குமார்**

## சென்னையில் இணையதளப் பிரிவு கருத்தரங்கம்

*கழகத்தின் இணையதளப் பிரிவு கருத்தரங்கம் சென்னை மாவட்ட இணையதளப் பிரிவு பொறுப்பாளர் இரண்யா தலைமையில் 26.03.2023 அன்று திராவிடர் விடுதலைக் கழகத் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. மாநாட்டுச் செய்திகளை முன்னெடுப்பது குறித்து விவாதிக்கப்பட்டது. யூடியூபில் செயல்பட வேண்டிய அவசியம், யூடியூப் சேனல்களைத் தொடங்கி இயக்குவது குறித்த அடிப்படையான தகவல்கள், சமூக வலைத்தளமான டிவிட்டரில் செயல்பாடுகளை தீவிரப்படுத்துதல் உள்ளிட்ட அம்சங்கள் குறித்து கருத்தரங்கில் பேசப்பட்டது.*

*பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ்., நாம் தமிழர் உள்ளிட்ட அமைப்புகள், கட்சிகளால் சமூக வலைத்தளங்களில் பரப்பப்படும் அவதூறுகளை முறியடிக்க, தோழர்கள் சமூக வலைதளங்களை எவ்வாறு ஆக்கப்பூர்வமாக பயன்படுத்தலாம் என்பது குறித்து சில முன்னணி யூடியூபர்கள் கருத்துக்களை பகிர்ந்துகொண்டனர். இறுதியாக திருப்பூர் மகிழவன் நன்றி கூறினார்.*

## "இது தமிழ்நாடு"
## சனாதனத்துக்கு சாவுமணி அடிக்கும் பெண்ணுரிமைத் திட்டங்கள்

- உலகப் பொருளாதார மன்றத்தின் பாலினச் சமத்துவ இடைவெளியைக் குறைக்கும் 2022ஆம் ஆண்டறிக்கை பெண்களின் பொருளாதாரம், கல்வி, உடல் நலம் மற்றும் அரசியல் பங்கேற்புக் குறித்து ஆராய்கிறது. 145 நாடுகள் தர வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. இதில் இந்தியாவின் இடம் 136. பொருளாதாரப் பங்கேற்பில் 143ஆவது இடத்தில் கடைசியிலிருந்து மூன்று இடங்களுக்கு மேலே இருக்கிறது.
- பெண்கள் உடல்நலன் பேணுவதில் பெண்களுக்கு கடைசி இடம். இதுதான் சனாதனம் - மதவாதம் பேசும் பா.ஜ.க. ஆட்சியின் "சாதனை".
- திராவிட ஆட்சி நடத்தும் தமிழ்நாட்டில் மட்டும் நிலைமை முற்றிலும் வேறு. தேசிய அளவிலான மெக்கன்சே ஆய்வு (2015), பாலினச் சமத்துவத்தைப் பேணுவதில் தலைசிறந்த மாநிலமாக தமிழ்நாட்டையும், கேரளாவையும் குறிப்பிடுகிறது.
- 32 சதவீதப் பெண்கள் தமிழ்நாட்டில் வேலைக்குச் செல்கின்றனர். இது அகில இந்திய சராசரியைவிட இரண்டு மடங்கு அதிகம் - இதுதான் திராவிட மாடல்.
- உயர்கல்வியில் பெண்கள் சேர்க்கை வீதம் 49 சதவீதம். அகில இந்திய அளவில் இது 25 சதவீதம் மட்டுமே. - இது தான் திராவிட மாடல்.
- இந்தியாவில் உற்பத்தித் துறையில் ஈடுபடும் 100 பெண்களில் 43 பேர் தமிழ்நாட்டைச் சார்ந்தவர்கள். (Annual Survey of Industries - 2019-2020)
- குடும்பக் கட்டுப்பாடு சாதனங்களைப் பெறுவது, பேறுகாலத்துக்கு முந்தைய பராமரிப்பு, மருத்துவமனையில் பிரசவங்கள் (வீடுகளில் அல்ல) ஆகிய குறியீடுகளில் - தமிழ்நாடு முதலிடம்.
- பெண் விடுதலைக்கு உரத்துக் குரல் கொடுத்த பெரியார் சிந்தனைகளை தி.மு.க. ஆட்சி தொடர்ந்து அமுல்படுத்தி வருகிறது.
- சுயமரியாதைத் திருமணச் சட்டம் (1967) அண்ணா கொண்டு வந்தார். 1975இல் கலைஞர் கைம்பெண் மறுமணத் திட்டம் கொண்டு வந்து, கைம்பெண்களுக்கு இழப்பீடு வழங்கியதோடு அவர்கள் மறுமணத்தையும் ஆதரித்தது.
- கலைஞர் தான் இந்து வாரிசுரிமைச் சட்டத்தில் திருத்தம் செய்து, பெண்களுக்கு சமபங்கு சொத்துரிமையில் வழங்கினார். தமிழ்நாட்டில் இந்தச் சட்டம் வந்த பிறகுதான் நாடாளுமன்றத்தில் இந்தியா முழுமைக்கும் சட்டம் வந்தது.
- எட்டாவது படித்த பெண்களுக்கு திருமண உதவித் தொகையாக ரூ.5000/ வழங்கும் திட்டம் தி.மு.க. ஆட்சியில் 1989இல் கொண்டு வரப்பட்டது. இதற்கு மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திட்டம் என்று பெயர் சூட்டப்பட்டது.
- பெண் பட்டதாரிகளின் உயர்கல்விக்கு உதவி செய்யும் நாகம்மையார் திட்டம் கொண்டு வரப்பட்டது.
- கருவுற்ற தாய்மார்களுக்கு நிதி உதவி வழங்கும் முத்துலட்சுமி அம்மையார் திட்டம் கொண்டு வரப்பட்டது.
- வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை கலைஞர் ஆட்சி வழங்கியதால் பெண்கள் அதிகாரத் தொடர்புகளை வளர்த்துக் கொண்டவர்களாக மாறினார்கள் என்று ஆக்ஸ்போர்டு யுனிவர்சிட்டி பிரஸ் நடத்திய ஆய்வு கூறியது.
- மு.க. ஸ்டாலின் ஆட்சிக்கு வந்த பிறகு தமிழ்நாட்டில் பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கான கொள்கைத் திட்டம் விரிவாக்கப்பட்டன. சட்டமன்றத் தேர்தல்களில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் பதிவு பெற்ற வேட்பாளர்களாக மூன்றில் ஒரு பங்கு பிரதிநிதித்துவம் வழங்க தமிழ்நாடு அரசின் இக்கொள்கை வலியுறுத்துகிறது.
- அரசுப் பணிகளில் உள்ள பெண்களின் மகப்பேறு விடுப்பு 9 மாதங்களிலிருந்து 12 மாதமாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்தியாவிலே இது தான் அதிகம்.
- உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 50 சதவீத இடஒதுக்கீடு.
- பெண்களுக்கு கட்டணமில்லா பேருந்து பயணம்.
- அரசுப் பள்ளியில் படித்து உயர்கல்வி பயில வரும் பெண்களுக்கு மாதம் ரூ.1000/- உதவித் தொகை.
- தகுதி வாய்ந்த குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1000/- உரிமைத் தொகை.

திராவிட மாடலின் இந்தப் பெண்ணுரிமைத் திட்டங்கள் சனாதனத்துக்கு மனுசாஸ்திரத்துக்கு பார்ப்பனியத்துக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டவை என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

சனாதனத்தை புதைகுழிக்குள் அனுப்பும்போது தான் சமூகத்தின் விடுதலை சாத்தியமாகும்.

சனாதனத்துக்கும் திராவிடத்துக்கும் எதிரான போராட்டத்தைக் கூர்மைப்படுத்துவோம்.

சனாதனத்தை பார்ப்பனியத்தை வீழ்த்த உறுதி எடுப்பதே கழகம் நடத்தும் சேலம் மாநாடு (ஏப். 29, 30).

தோழர்களே, தயாராவீர்!

### ஆர்.எஸ். பாரதிக்கு பதிலடி
## 'ராசி' மீது எனக்கு நம்பிக்கை இல்லை – உதயநிதி ஸ்டாலின்

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. கூட்டத்தில் பேசிய அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், "எனக்கு ராசி மீது நம்பிக்கை இல்லை; உழைப்பின் மீது தான் நம்பிக்கை" என்று கூறினார்.

முன்னதாகப் பேசிய தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, "2019ஆம் ஆண்டிலிருந்து கடந்த 5 தேர்தல்களாக நான் பிரச்சாரம் செய்யும் இடங்களில் எல்லாம் வெற்றி கிடைத்து வருகிறது. அதற்கான 'ராசி' என்னிடம் இருக்கிறது" என்றார்.

இதற்கு பதிலளித்துப் பேசிய அமைச்சர் உதயநிதி, "எனக்கு ராசி மீதெல்லாம் நம்பிக்கை கிடையாது. அண்ணன் ஆர்.எஸ்.பாரதிக்கு நம்பிக்கை இருக்கும் என்றால் அதை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

வெற்றிகளுக்கு எல்லாம் காரணம் தலைவர், கழகப் பொறுப்பாளர்களின் கடும் உழைப்பு; ராசி அல்ல" என்று மேடையில் பதிலடி தந்தார் உதயநிதி.

## மத்திய அமைச்சகப் பதவிகளில் பிற்படுத்தப்பட்டோருக்கு பட்டை நாமம்!

மத்திய அமைச்சரவையில் அமைச்சக துறைகள் - 42.

இதில் தலைமை நிர்வாகம் (ஏ பிரிவு)

கண்காணிப்பு (பிரிவு பி)

திறன் மிக்க தொழிலாளர்கள் (Workers Skilled - பிரிவு சி)

திறன் பெறாத தொழிலாளர்கள் (Workers unskilled).

இவர்களில்,

பிற்படுத்தப்பட்டோர் எண்ணிக்கை - 22.62 சதவீதம் மட்டுமே.

பட்டியல் பிரிவினர் - 17.38 சதவீதமே.

பழங்குடிப் பிரிவினர் - 10.18 சதவீதமே.

5 மத்திய அமைச்சகங்களில் 'ஏ' பிரிவில் ஒரு பிற்படுத்தப்பட் டோர்கூட இல்லை - 0.

7 அமைச்சகங்களில் 'பி' பிரிவு அதிகாரிகளில் ஒரு பிற்படுத்தப்பட்டோர்கூட இல்லை - 0.

(இது 31.3.2022 நிலவரம்)

ஆதாரம் : Department of Public Center Prises Survey - 2021. 22

தகவல் : ஜி. கருணாநிதி (செயலர் - அகில இந்திய பிற்படுத்தப்பட்டோர் சம்மேளனம்)

பிற்படுத்தப்பட்டோருக்காக போலிக் கண்ணீர் வடிக்கும் பா.ஜ.க. சங்கிகளே - இதற்கு என்ன பதில்?

## குழந்தைகள் பழகு முகாம்: ஒரு வேண்டுகோள்!

தமிழ்நாடு அறிவியல் மன்றத்தின் குழந்தைகள் பழகு மகிழ்வு முகாம் 2023 மே மாதம் 5 நாட்கள் நடைபெற உள்ளது. 10 வயது முதல் 15 வயது வரை உள்ள குழந்தைகள் பங்கேற்கலாம்.

இடம், நேரம், கட்டணம் பின்னர் அறிவிக்கப்படும்.

பதிவு செய்து கொள்ள விரும்பும் தோழர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய எண்கள்

சிவகாமி : 9842448175

சிவகுமார் : 96888 56151

## வரலாற்று நிகழ்வை சுட்டிக்காட்டி கொளத்தூர் மணி பேச்சு

# நாதசுவரக் கலைஞர், தோளில் துண்டு போடுவதையே எதிர்த்தது சனாதனம்

***பிப்ரவரி 18, 2023 அன்று கோவை மாநகரக் கழகம் நடத்திய "1929 செங்கல்பட்டு முதல் சுயமரியாதை இயக்க மாநாடும், தமிழ் நாட்டு அரசியலும் கருத்தரங்க"த்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆற்றிய உரை. (சென்ற இதழ்த் தொடர்ச்சி)***

ஒரு திருமண ஊர்வலத்தின் போது நாதஸ்வரம் வாசித்துக் கொண்டு செல்கிறார்கள். ஒரு பெரிய புகழ்பெற்ற இசை கலைஞர். அஞ்சாநெஞ்சன் அழகிரி அவர்கள் இசையில் ஆர்வம் உடையவர். அந்த இசையை கேட்க சென்று விட்டார். அந்த நாதஸ்வரக் கலைஞர் அங்க வஸ்திரத்தை இடுப்பில் கட்டி இருக்கிறார். வியர்வையைத் துடைப்பதற்கு தோளில் போட்டிருந்தார். அந்தக் கூட்டத்தில் இருந்த ஒருவர் நாதஸ்வரக் கலைஞர் தோளில் போட்டிருந்த துண்டை எடுக்க சொல்கிறார். நீ சின்ன ஜாதிக்காரன் நீ எதற்கு துண்டை தோளில் போடுகிறாய், அதை எடு என்கிறார். இசைக் கலைஞர்களை அப்படி மதித்து கொண்டிருந்த காலம்.

அவர் அங்கவஸ்திரத்தை இடுப்பில் தான் கட்டியிருக்கிறேன், இது வியர்வையை துடைப்பதற்காகத்தான் என்று சொல்கிறார். அதைக் கூட போடக்கூடாது என்று அந்த கூட்டத்தில் இருந்த ஒருவர் சொல்கிறார். உடனே அழகிரி தோளில் இருந்து துண்டை எடுக்காதே என்று சொல்கிறார். இல்லையேல் நீ வாசிக்காதே நிறுத்து என்று சொல்லிவிட்டு பெரியாரிடம் ஓடி வருகிறார். பெரியாரிடம் பிரச்சனையை விளக்கிப் பேசுகிறார் அந்த நாதஸ்வர கலைஞர். அப்பொழுதே 400 ரூபாய் சம்பளம் பெறக்கூடிய புகழ்பெற்ற நாதஸ்வரக் கலைஞர். உடனே பெரியார் நாம் பணம் கொடுத்து விடலாம் உடனே நிறுத்து என்று சொல் என்று கூறி விடுகிறார். அதற்குப் பிறகு அந்த நாதஸ்வரக் கலைஞரை பெரியாரிடம் கூட்டி வருகிறார் அழகிரி. பிறகு திருமண வீட்டினர் பெரியாரிடம் வந்து கெஞ்சி சமாதானப்படுத்திய பிறகு தோளில் துண்டை போட்டுக்கொள்ள ஒப்புக்கொண்டனர். அப்புறம் பெரியார் அந்த அங்க வஸ்திரத்தை எடுத்து தோளில் போடு அதை ஏன் இடுப்பில் கட்டிக் கொண்டிருக்கிறாய் என்று கூறினார்.

சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்த திருவாடுதுறை ராஜரத்தினம் பிள்ளை. அவர் பட்டு வேட்டியும் பட்டு சட்டையும் தோளில் துண்டையும் போட்டுக் கொண்டுதான் நாதஸ்வரம் வாசிப்பார். ஒரு நாளும் இவை இல்லாமல் வாசிக்க மாட்டார். அதற்குப் பின்னால்தான் சுயமரியாதை இயக்கக் கூட்டங்கள் நடக்கிற ஊர்களில் எல்லாம் உள்ளூர் தோழர்களை அழைத்து, யார் யாரெல்லாம் உள்ளூரில் தோளில் துண்டு போடாமல் இருக்கிறார்களோ அவர்களை எல்லாம் மேடையில் ஏற்றி அமர வைத்து, இவருக்கு துண்டை அணிவிக்கிறேன் என்று கூறி துண்டை அணிவிக்கிறார்கள். இதுதான் தொடக்கம்.

அதற்குப் பின்னால் அறிஞர் அண்ணா அவர்கள் கைத்தறி நெசவாளர்களின் துயரைத் துடைப்பதற்காக கைத்தறி ஆடைகளை வாங்கி அணியுங்கள் என்று சொன்னார். அதில் தோழர்கள் கைத்தறி ஆடைகளைத் தான் அணிய வேண்டும். மேடைகளில் அணிவிக்கும் துண்டும் கைத்தறியாகத் தான் இருக்க வேண்டும் என்ற இன்னொரு நோக்கத்தையும் இணைத்து அதை ஊக்குவிக்கவும் செய்தார் அண்ணா. தொடங்கி வைத்தது சுயமரியாதை இயக்கம் தான். அதைத் தான் சுயமரியாதை இயக்க மாநாட்டில் பெரியார் பேசினார்.

அதற்குப் பிறகு தமிழிசை மாநாடு. நீங்கள் பாடுவதெல்லாம் சரி, நன்றாக பாடுகிறீர்கள் ஆனால் அதைத் தமிழில் பாடுங்கள் ஏன் சமஸ்கிருதத்தில் பாடுகிறீர்கள்? என்று பெரியார் கேட்டார். தமிழில் பாடிய பிறகு பெரியார் வருத்தப்பட்டார். காரணம் முதலில் அர்த்தம் தெரியாது இப்பொழுது தமிழில் பாடி கேவலமான செய்திகள் எல்லாம் பாடி வருகிறார்கள். சமஸ்கிருதத்தில் பாடினால் கூட ஒரு எழவும் புரியாது என்று கூறி வருத்தப்பட்டார். இனி 'தமிழில் பாடு! தமிழர்களுக்காகப் பாடு! தமிழர் முன்னேற்றத்திற்காகப் பாடு!' என்று கூறி அடுத்த



இசை இயக்கத்தைக் கொண்டு வந்தார். அதற்கு தமிழிசைக் கலைஞர்கள் ஏராளமானவர்கள் வந்தார்கள். பம்மல் சம்பந்தனார், அவர் பெரிய நாடகக் கலைஞர். சுயமரியாதை இயக்க நாடகக் குழுவின் தலைவராக இருந்தவர். "பிராமணனும் சூத்திரனும்" என்றவொரு நாடகத்தை நடத்தியவர் அவர். ஆனால் இதையெல்லாம் வரலாற்றில் சொல்வதில்லை. சுயமரியாதை இயக்கம் யார் யாரையெல்லாம் வளர்த்து விட்டது என்பதை பற்றி வரலாற்றை எழுதுபவர்கள் எழுதுவதில்லை.

பிறகு இளைஞர் மாநாட்டில் ஒரு தீர்மானம் கொண்டு வருகிறார்கள். திருமணம் செய்ய அபிப்பிராயம் உள்ள இளைஞர்கள் விதவைகளையே திருமணம் செய்ய வேண்டும் என்று ஒரு தீர்மானத்தை 1930-இல் கொண்டு வருகிறார். முதல் சுயமரியாதைத் திருமணமான சுக்லாநத்தம் திருமணத்தில் யாரும் புதுத்துணி அணியவில்லை. மணமகளும் மணமகனும் வழக்கம்போல் இருக்கிற துணிகளைத் துவைத்து அதை அணிந்து வந்தார்கள். இதுதான் சிறப்பு. யாரும் நகை அணிந்திருக்கவில்லை என்பது இன்னொரு சிறப்பு. அதைவிட சிறப்பு பெரியாரை வரவேற்று மணமகள் ஒரு பாடலைப் பாடுகிறார். அவரே பாடலை எழுதி இசையமைத்திருந்தார்.

- *இளைஞர்கள் கணவனை இழந்த பெண்களையே திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று 1930இல் தீர்மானம் போட்டவர் பெரியார்.*
- *சிறுபான்மைப் பண்பாடு பார்ப்பனர்களுக்கானது; சிறுபான்மை மதம் முஸ்லீம், கிறிஸ்தவர்களுக்கானது என்று பெரியார் விளக்கினார்.*
- *மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் திராவிடர்கள் என்று பதிவு செய்யக் கோரியது - நீதிக்கட்சி மாநாடு.*

அதைவிட முக்கியமான செய்தி ஒன்றை நான் கூற வேண்டும். பெரியாருடைய அரசியல் பார்வை எப்படி கூர்மையாக இருந்தது என்பதற்காக கூறுகிறேன்.

1931இல் கராச்சியில் காங்கிரஸ் மாநாடு நடைபெறுகிறது. அப்போதுதான் பூர்ண சுயராஜ் என்ற ஒரு தீர்மானம் போடுகிறார்கள். அதில் உரிமைச் சட்டங்கள் பற்றி எழுதும்போது மத நடுநிலைமை என்று எழுதுகிறார்கள். பழக்க வழக்கங்கள் பேணப்படும் என்ற சொல்லும் அந்தத் தீர்மானத்தில் இருக்கிறது. மற்றொன்று சிறுபான்மை மொழிகள், பழக்கவழக்கங்கள் பாதுகாக்கப்படும் என்று இருக்கிறது.

பெரியார் உடனே கராச்சி மாநாடு என்ற தலைப்பில் மூன்று தலையங்கங்களை எழுதுகிறார். என்ன மத நடுநிலைமை. 'செக்யூலரிசம்' என்ற சொல் ஆங்கிலத்தில் இருந்து வந்தது. ஆங்கிலத்தில் இதற்கு என்ன பொருள் இருக்கிறதோ அதைத்தான் பயன்படுத்த வேண்டுமே தவிர மத நடு நிலைமை என்றால் என்ன? எல்லா மதங்களையும் ஒன்றுபோல் பயன்படுத்துவதா? அதுதான் மத நடு நிலைமையா? பெரியார் இன்னும் கோபமாகச் சொன்னார். கன்னிப்பெண் என்றால் என்ன பொருள் என்றால் எல்லா ஆண்களையும் சமமாகப் பாவிப்பது போல இருக்கிறது உங்கள் விளக்கம் என்று சொல்லி மறுப்பு தெரிவித்தார். அது கூடாது என்றார்.

சிறுபான்மைப் பண்பாடு என்பது பார்ப்பனர்களுக்காக எழுதப்பட்டது. சிறுபான்மை மதம் என்றால் கிறிஸ்தவர்களையும் இஸ்லாமியர்களையும் குறிக்கும். சிறுபான்மை மொழி. பண்பாடு என்றால் பார்ப்பனர்களைப் பாதுகாப்பிற்காக எழுதி வைத்திருக்கிறீர்கள் என்றார் பெரியார்.

மத நடுநிலைமை, பண்பாடு என்ற சொற்கள் நீக்கப்பட வேண்டும் என்று 1931 ஆகஸ்ட் மாதம் விருதுநகரில் நடைபெற்ற மாநாட்டில் பெரியார் தீர்மானம் இயற்றினார். சிறுபான்மை மக்களுக்குப் பாதுகாப்பு தரலாம், ஆனால் சிறுபான்மை மொழிகளுக்கு என்றால் அது சமஸ்கிருதத்தைத் தான் குறிக்கும். அதனால் இந்த சொற்களெல்லாம் கூடாது என்று பெரியார் தெளிவாகச் சொன்னார்.

அந்த மாநாட்டில் மிக முக்கியமான மற்றொரு தீர்மானமும் இயற்றப்பட்டது. அது மத சம்பந்தமான விடுமுறைகளை அரசு ஊழியர்களுக்குக் கொடுக்கப் படக்கூடாது. நீங்கள் வேண்டுமானால் சிறு விடுப்புகளை 10 நாட்கள் கூடுதலாக வழங்கிக் கொள்ளுங்கள். பெரியார் சொல்கிறார், நான் ரஷ்யாவில் பார்த்திருக்கிறேன். 7.14.21.28 ஆகிய தேதிகளில் தான் விடுமுறை அது எந்தக் கிழமையில் வந்தாலும் சரி. இப்படி ஒரு முறையை கொண்டு வருவது தான் மத பாகுபாடு அல்லாத சமுதாயம் அமைவதற்கு உதவியாக இருக்கும். எனவே இதைச் செய்தாக வேண்டும் என்று தீர்மானம் போட்டார். அப்பொழுது மட்டும் அல்ல 1944 மாநாடு, 1948 சிறப்பு மாநாடு என இந்த மாநாடுகளில் எல்லாம் மேற்கண்ட தீர்மானத்தை பெரியார் கொண்டு வந்தார்.

1940 திருவாரூரில் நீதிக்கட்சி மாநாடு. அதுதான் பெரியார் நீதிக் கட்சித் தலைவராகப் பொறுப்பேற்ற பின் நடந்த முதல் மாநாடு. தமிழ்நாட்டில் பெயர்களுக்கு முன்னால் ஸ்ரீ, ஸ்ரீமதி என்று போடக்கூடாது. திரு, திருமதி என்றே வழங்க வேண்டும் என்று மற்றொரு தீர்மானத்தை இயற்றுகிறார். அடுத்த மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் எல்லோரும் தங்களை திராவிடர் என்று பதிவு செய்து கொள் என்று மற்றொரு தீர்மானத்தை இயற்றுகிறார். அந்த தீர்மானத்தை முன்மொழிந்தவர் அண்ணல் தங்கோ ஆவார்.

திராவிட நாடு பிரிவினை கோரிக்கை தீர்மானமாக போடப்படுகிறது. திராவிடர்களின் அகமாகிய சென்னை மாகாணம் பிரிக்கப்பட வேண்டும். அதை இந்தியாவில் இருந்து பிரித்து நேரடியாக பிரிட்டிஷ் அரசருடைய நேரடி மேற்பார்வையில் இருக்க வேண்டும். இந்தியாவிற்கான மந்திரியின் நேரடி கண்காணிப்பில் இருக்க வேண்டும் என்று தீர்மானத்தை இயற்றினார்.

இங்கு வரதராஜலு என்ற ஒரு தலைவர் இருந்தார். அவர் பெரியாருக்கு நெருக்கமான நண்பர். அவருடன் பல காலங்களில் ஒன்றாக பயணித்தவர். அவர் காங்கிரஸ் முழு விடுதலை என்று தீர்மானம் இயற்றிய போது காங்கிரஸில் இருந்து வெளியேறினார். நாம் ஆட்சி செய்கிற போதிய ஆற்றலை நாம் வளர்த்துக் கொள்ளவில்லை. வளர்த்துக் கொள்ளாமலயே நீங்கள் முழு விடுதலை கேட்பது மீண்டும் ஜாதிய ஆதிக்கத்தைத் தான் நிலைநிறுத்தும். திருப்பி பார்ப்பனர்கள் தான் தலைவராக இருப்பார்கள், நாம் கீழே தான் இருக்க வேண்டும் என்று சொல்லி காங்கிரஸ் தலைவராக இருந்த வரதராஜலு நாயுடு கட்சியை விட்டே விலகினார். நமக்கு குடியேற்ற நாடு தகுதி தான் வேண்டும், அதுவரை நேரடியாக அவர்களது கண்காணிப்பில் இருக்கட்டும். நமக்கு அரசியல் அறிவு வளருகிற வரை ஆங்கிலேயனே ஆளட்டும். இல்லையேல் வடவரிடம் மாட்டிக் கொள்வோம் அதனால் நான் ஒப்புக் கொள்ள மாட்டேன் என்று கூறி கட்சியை விட்டு வெளியே செல்கிறார். இப்படிப்பட்ட நிலையில் தான் பெரியாரும் தீர்மானம் இயற்றுகிறார். ஆனால் பெரியாரை விமர்சனம் செய்கிறார்கள். இந்தியாவிற்கு விடுதலை என்பதை மிகப் பெரிய பித்தலாட்டம். இந்தியாவிற்கு விடுதலை ஆனால் கவர்னர் ஜெனரலாக ஆங்கிலேயர் இருப்பார். மூன்று படை பிரிவுகளுக்கும் படைத் தளபதிகளாக ஆங்கிலேயர்களே இருப்பர். முக்கியமாக 1954 ஆம் ஆண்டு வரை கடற்படைக்கு ஆங்கிலேயர்களே தளபதிகளாக இருந்தார்கள். 8 மாகாணங்களில் 5 மாகாணங்களில் ஆளுநர்களாக ஆங்கிலேயர்களே இருந்தார்கள். நீ ஏன் மக்களிடம் விடுதலை என்று பேசிக் கொண்டிருக்கிறாய், உனக்கு குடியேற்ற நாடு தகுதி தான் கொடுத்திருக்கிறார்கள். உங்களுக்கு விடுதலை என்பது அரசியல் சட்டம் எழுதி, ஏற்றுக் கொள்ளப்பட்டு எல்லா மக்களுக்கும் வாக்குரிமை கொடுத்து தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு அமைந்தால் தான் அது குடியரசு. அப்போது தான் விடுதலை. ஆனால் நீங்கள் பொய் சொல்லிக் கொண்டு இருக்கிறீர்கள் என்று பெரியார் சொன்னார்.

(4ஆம் பக்கம்)

# மோடி – ஜாதிப் பெயர் அல்ல

அதானியைக் காப்பாற்றுவதற்காக நாடாளுமன்றத்திற்குள்ளேயே வரவிடாமல் ராகுல் காந்தியை தடுத்துவிட்டது ஒன்றிய ஆட்சி. ஆனால் இப்போது மோடி என்ற பிற்படுத்தப்பட்ட சமூகத்தை ராகுல் காந்தி இழிவு செய்து விட்டார் என்று ஒரு பொய்யான பிரச்சாரத்தை பாஜக தலைவர்கள் கட்டவிழ்த்துவிட்டு இருக்கிறார்கள். இந்தப் பிரச்சாரத்தில் உண்மை இருக்கிறதா?

**ராகுல் காந்தி குறிப்பிட்ட நீரவ் மோடி, லலித் மோடி, மெகுல் சோக்ஸி ஆகிய மூவரும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த வர்கள் அல்ல. அவர்கள் முன்னேறிய ஜாதியினர். மோடி என்பதும் கூட ஒரு ஜாதி இல்லை. பெயருக்குப் பின்னால் மோடி என்று போட்டுக் கொள்வது ஒரு மரபு பெயர். அது ஜாதிப் பெயரல்ல.**

பிலு மோடி என்று நாட்டின் மிகப்பெரிய எதிர்க்கட்சித் தலைவர் ஒருவர் இருந்தார். அவர் பார்சி சமூகத்தைச் சேர்ந்தவர். அதேபோல் பாகல் என்று சொல்லப்படுகிற ஒரு மரபுப் பெயர் பலராலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. சத்தீஸ்கர் மாநில முதலமைச்சராக இருக்கிற பூபேஷ் பாகல் ஒரு பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர். ஆனால் அதே பாகல் என்ற மரபு பெயர் ராஜபுத்திரர்களாலும், பழங்குடியினர்களாலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**மோடி பெயருக்குப் பின்னால் இருப்பது ஜாதி பெயர் இல்லை ஒரு மரபுப் பெயர் தான். மோடி பிறந்த ஜாதி எண்ணெய் எடுக்கும் ஒரு சமூகத்தை சேர்ந்தவர். இதுதான் இவர்கள் பிற்படுத்தப்பட்டோர் மீதான கவலை!**

பிற்படுத்தப்பட்டோருக்கு தாங்கள் காவலர்கள் என்று பேசிக் கொண்டிருக்கிற இவர்கள் பிற்படுத்தப்பட்டோருக்கு என்ன செய்திருக்கிறார்கள்? அகில இந்திய மருத்துவப் படிப்புக் கோட்டாவில் பிற்படுத்தப்பட்டோருக்கு தனி இட ஒதுக்கீடு வேண்டும் என்ற கோரிக்கையை எதிர்த்து அதை மறுத்தது ஒன்றிய பாஜக ஆட்சி. நீதிமன்ற வரை சென்று வழக்கு தொடர்ந்து பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டை எதிர்த்தது. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தொடர்ந்த வழக்கில் தான் இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் பிற்படுத்தப்பட்டோருக்கு அகில இந்திய கோட்டாவில் இட ஒதுக்கீடு கிடைத்தது.

**சத்தீஸ்கர் மாநிலத்தில் இப்போது காங்கிரஸ் ஆட்சி நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. பூபேஷ்பாகல் அந்த மாநில முதலமைச்சராக இருக்கிறார். மாநில சட்டமன்றம் பிற்படுத்தப்பட் டோருக்கான இட ஒதுக்கீட்டை அதிகரித்து மாநில ஆளுநருக்கு அனுப்பி வைத்திருக்கிறது. ஆனால் அந்தத் தீர்மானத்திற்கு ஆளுநர் ஒப்புதல் தராமல் தமிழ்நாட்டு ஆளுநரைப் போலவே கிடப்பில் போட்டுள்ளார்.**

பொதுத்துறை வங்கிகளில் பொது மேலாளர் பதவிகளில் 91% பேர் இப்போதும் பார்ப்பனர்கள் தான். பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட் டோர் பாதி அளவுக்கு கூட வர முடியவில்லை. டெலிஸ் என்று ஒரு பிற்படுத்தப்பட்ட சமூகம் இருக்கிறது. இந்த டெலிஸ் என்ற பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள், மோடி என்ற மரபுப் பெயரைப் பயன்படுத்தி வருகிறார்கள். பெரும்பாலோர் மோடி என்ற மரபுப் பெயரைப் பயன்படுத்துவதில்லை. ஆக மோடி என்பது ஜாதிப் பெயர் அல்ல; அது ஒரு மரபுப் பெயர். ஆனால் ராகுல் காந்தி பிற்படுத்தப்பட்ட ஜாதிக்கு எதிரானவர் என்ற ஒரு பொய்யான பிரச்சாரத்தை அவிழ்த்துவிட்டு அதானியை காப்பாற்றுகிற பிரச்சாரங்கள் நாட்டில் ஒருபோதும் எடுபடாது

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்படி தன்னுடைய துல்லியமான பார்வையின் மூலம் எல்லாவற்றையும் ஆய்வுக்கு உட்படுத்தியவர் பெரியார். சுயமரியாதை இயக்க மாநாடாக இருக்கட்டும். திராவிடர் கழக மாநாடுகளாகட்டும். நீதிக்கட்சியாக இருந்தபோதும் எல்லாவற்றிலுமே ஜாதி ஒழிப்பு என்பதும் பெண்ணுரிமை என்பதும் சுற்றிச்சுற்றி வந்திருக்கிறது. ஆனால் ஆட்சிக்கு வந்த பிறகு நடைமுறைப்படுத்தியதில் பலவற்றை நாம் சொல்லலாம்.

பெண்களுக்கு சொத்துரிமை சட்டம். கலைஞர் சட்டமன்றத்தில் சொன்னார், பெரியார் 1929-இல் தீர்மானம் இயற்றினார், நாங்கள் 60 ஆண்டுகள் கழித்து 1989-இல் சட்டமாக்கியிருக்கிறோம் என்று கலைஞர் பேசினார். இந்தியாவிலும் சட்டமாக வந்துவிட்டது. எப்பொழுது என்றால் 2005இல் 16 ஆண்டுகள் கழித்துத்தான் இந்த சட்டத்தை ஏற்றுக் கொண்டார்கள். மறுமணம். 1855 ஆம் ஆண்டு ஒன்றுக்கும் மேற்பட்ட மனைவிகளை திருமணம் செய்து கொள்ளக் கூடாது என்ற முழக்கங்கள் பல இடங்களில் எழுந்தது. குறிப்பாக வடநாட்டில் வித்யாசாகர் மற்றும் ஆங்கிலேயர் ஒருவர். இவர்கள் இதற்கென்று ஒரு சட்டத்தை வடிவமைத்துக் கொடுத்தார்கள். 1857-ல் சிப்பாய் கலகம் வந்துவிட்டது, இதனால் அது நின்றுவிட்டது. மீண்டும் புரட்சியாளர் அம்பேத்கர் அதை எழுதிக் கொடுத்தார். 1955- ஆம் ஆண்டு தான் ஒருதார திருமணம் சட்டமே வந்தது.

ஒரு சட்டம் வர 100 ஆண்டுகள் காத்திருக்க வேண்டிய இந்த சமுதாயத்தில் தமிழ்நாட்டில் அவர் கருத்துக்களை ஏற்றுக் கொண்ட தி.மு.க. ஆட்சி வந்த பின்னால் வேகவேகமாக சில ஆண்டுகளிலேயே நிறைவேறுகிறது. இதுதான் திராவிட மாடல்.

(நிறைவு)

# ராகுலை எதிர்ப்பவர்கள் மனுதர்மத்தை ஆதரிப்பது ஏன்?

சூரத் நீதிமன்றம் ராகுல் காந்திக்கு இரண்டு ஆண்டுகள் சிறை தண்டனை விதித்திருக்கிறது. 2019 நாடாளுமன்ற தேர்தலின் போது கோலாரில் பிரச்சாரம் செய்த ராகுல் காந்தி அனைத்து திருடர்களும் மோடி என்ற ஒரு குடும்பப் பெயர் வைத்துள்ளனர் என்று போகிற போக்கில் ஒரு கருத்தைக் கூறினார்.

இதை எதிர்த்து பாஜக எம்.எல்.ஏ. ஒருவர் வழக்குத் தொடர்ந்தார். அந்த விசாரணை முடிந்த நிலையில் அவரை குற்றவாளி என்று அறிவித்த நீதிமன்றம் இரண்டு ஆண்டு சிறை தண்டனையையும் விதித்துள்ளது. ஒட்டுமொத்த மோடி சமூகத்தையும் அவமதித்து விட்டார் என்று இந்த தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது.

மனுதர்மம் இன்றைக்கும் பார்ப்பனரல்லாத மக்களை சூத்திரர் என்று கூறுகிறது. சூத்திரர்கள் என்று சொன்னால் பார்ப்பனர்களுக்கு வைப்பாட்டி மக்கள், விலைக்கு வாங்கப்பட்டவர்கள், அடிமை சேவகம் செய்பவர்கள் என்றெல்லாம் மனுதர்மம் எழுதி வைத்திருக்கிறது. அது தடை செய்யப்படவில்லை. ஒட்டு மொத்த பார்ப்பனரல்லாத மக்களும் பெண்களும் சூத்திரர் என்ற இழிவுக்கு இப்போதும் உள்ளாக்கப்பட்டு வருகிறார்கள்.

அதற்குப் பாதுகாப்பு அரணாக ஆகமம் என்ற ஒன்றை தூக்கிக்கொண்டு சூத்திரராக இருப்பவர்கள் கோயில் கர்ப்ப கிரகத்துக்குள் நுழைந்தாலே சாமி தீட்டு ஆகிவிடும் என்று கூறுகிறார்கள். இதை நீதிமன்றங்களும் தீர்ப்புகளாக உறுதிப்படுத்தி வருகிறது. இவ்வளவு அவமானங்கள் ஒரு பெரும்பான்மை சமூகத்தின் மீது பார்ப்பனியத்தால் சுமத்தப்படுவதைப் பற்றி இங்கே எவருக்கும் எந்த கவலையும் இல்லை. எந்த எதிர்ப்பும் நாட்டில் வருவதும் இல்லை.

இலண்டனில் ராகுல் காந்தி பேசியபோது, இந்திய ஜனநாயகத்தை விமர்சித்து விட்டதாக மக்களவையில் ஆளுங்கட்சியினரே பிரச்சினையைக் கிளப்பி நாடாளுமன்றத்தை முடக்கிக் கொண்டு வருகிறார்கள். ராகுல் காந்தி மன்னிப்பு கேட்க வேண்டும் என்கிறார்கள். நான் விளக்கம் தர வேண்டும்; அதற்குப் பேச அனுமதி வேண்டும் என்று சொன்னால் உனக்கு பேசுவதற்கு அனுமதி கிடையாது என்கிறார்கள். இப்போது நாடாளுமன்றத்துக்குள் வரவிடாமலேயே பதவியை பறித்து விட்டார்கள். காஷ்மீரில் பாதயாத்திரை மேற்கொண்ட ராகுல் காந்தி பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்படுகிறார்கள் என்று பேசிய பேச்சை பெரிய பிரச்சினையாக்கி அவரது வீட்டிற்கு போலீசை அனுப்பி விசாரணை நடத்துகிறார்கள்.

இந்த பழிவாங்கும் அரசியலை எதிர்த்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், நான் ராகுல் காந்தி பக்கம் நிற்கிறேன் என்று கூறியிருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும். பழிவாங்கும் பார்ப்பன அரசியல் பாசிசத்தை வருகிற நாடாளுமன்ற தேர்தலில் வீழ்த்துவதை தவிர இந்த நாட்டிற்கு வேறு விடுதலையே இல்லை.

## இணையதளப் பொறுப்பாளர் விஜய்குமார் – புதிய இல்லம் : கழகத் தலைவர் திறந்து வைத்தார்



கழக இணையதளப் பொறுப்பாளர் விஜய் குமாரின் கண்மணி இல்லத்தைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, திராவிடர் விடுதலைக் கழகக் கொடி யேற்றி திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், தென் சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் இரா.உமாபதி, சட்டக் கல்லூரிப் பேராசிரியர் முனைவர் கனக விநாயகம், ஸ்டாலின், சிபி.எம்.எல். மாவட்டக் குழு உறுப்பினர் தினேஷ்குமார், அருண், சூழலியலாளர் முனைவர் உதயகுமார், பெரியார் விழுது இளம்பரிதி உள்ளிட்ட பல்வேறு தோழர்கள் கலந்துகொண்டனர்.

மற்றும் விஜயகுமார், கழக வார ஏடான "புரட்சிப் பெரியார் முழக்கம்" வளர்ச்சி நிதியாக ரூ.5000 மற்றும் சென்னை மாவட்டக் கழக வளர்ச்சி நிதியாக ரூ.5000 வழங்கினார். தோழர்கள் அனைவருக்கும் தேநீர் வழங்கப்பட்டது

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 31st March 2023

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN